<u>சுருக்கம்</u>

பழங்குடியினர் நலம் – 2013–2014–ம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.32,29,99,500/– (ரூபாய் முப்பத்திரெண்டு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து தொண்ணுாற்று ஒன்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே1 (2) துறை

அரசாணை (ப) எண். 7

நாள் 09 .01.2014
விஜய மார்கழி 25, திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது:

1. அரசாணை (ப) எண்.21, ஆதி(ம)பந துறை நாள் 21.8.2013
2. அரசாணை (நிலை) எண்.74, ஆதி(ம)பந (ஆதிந4) நாள் 11.10.2013
3. அரசாணை (நிலை) எண்.76, ஆதி(ம)பந (பமே2) நாள் 15.10.2013
4. பழங்குடியினர் நல இயக்குநர், கடிதம் நக எண்.பமே/அ2/1217/2013 நாள் 29.10.2013,

------

<u>ஆணை:-</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த 2012–2013–ம் ஆண்டிற்கு ரூ.50.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2013–2014ம் ஆண்டிற்கும் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.50.00 கோடி வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் தருமபுரி மாவட்டம், சித்தேரியில் அமைந்துள்ள அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 100 மாணவர்கள் மற்றும் 100 மாணவியர்கள் தங்கிப் பயிலும் வகையில் இரண்டு விடுதிகளை 2013–2014–ஆம் ஆண்டில் கட்டுவதற்கென ரூ.4,34,00,000/ – (ரூபாய் நான்கு கோடியே முப்பத்து நான்கு இலட்சம் மட்டும்) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் IIT மற்றும் NIT ஆகிய உயர்தொழில் நுட்ப கல்லூரிகளில் பழங்குடியின மாணாக்கர்கள் சேர்ந்து பயிலும் வகையில் தாட்கோ மூலம் போட்டித் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி அளிக்க இரண்டு ஆண்டு கால பயிற்சியினை ரூபாய் ஒரு கோடி செலவினத்தில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் செயல்படுத்த அனுமதி அளித்தும் 2013–2014–ஆம் ஆண்டில் இச்செலவினத்திற்காக தேவைப்படும் தொகை ரூ.50.00 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்கில் காணும் கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர் ரூ.50.00 கோடி மதிப்பீட்டிலான பின்வரும் பணிகளை செயல்படுத்த அரசுக்கு கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

| வ. எண். | திட்டம் | செயல்படுத்தும் முகமை | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | வருவாய் கணக்கு | மூலதனக் கணக்கு | மொத்தம் |
| 1. | கச்சா வீடுகள் மேம்பாட்டுத்திட்டம், வேலூர் மற்றும் சேலம் மாவட்டம் | வனத்துறை | 800.00 | | 800.00 |
| | இணைப்புச் சாலை , வேலூர் வனச்சரகம் | வனத்துறை | | 500.00 | 500.00 |
| 2. | இணைப்புச் சாலை, சிறுமலை பழங்குடியினர் பகுதி, திண்டுக்கல் மாவட்டம் | வனத்துறை (FE wing) | – | 540.00 | 540.00 |
| 3. | இணைப்புச் சாலை, வேலூர் மாவட்டம் | மாவட்ட ஆட்சியர், வேலூர். | – | 168.00 | 168.00 |
| 4. | இணைப்புச் சாலை , திருநெல்வேலி மாவட்டம் | மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி | | 90.00 | 90.00 |
| 5. | கோழிக்குஞ்சு பொறிப்பக அலகு அமைத்தல் | கால்நடை பராமரிப்புத்துறை | 42 | 35 | 77.00 |
| 6. | மண்வள பாதுகாப்பு பணிகள் | வேளாண் பொறியியல் துறை | – | 550.684 | 550.684 |
| 7. | தனி நபர் பழத்தோட்டம் அமைத்தல், காய்கறி விதைகள் வழங்குதல் | தோட்டக் கலைத்துறை, | 3.468 | – | 3.468 |
| 8. | பாலம் கட்டும் பணி, தேக்கணாம்பட்டி, தருமபுரி மாவட்டம் | மாவட்ட ஆட்சியர், தருமபுரி மாவட்டம். | | 140.00 | 140.00 |
| 9. | ஆறு பழங்குடியின மொழி பேச்சு வழக்கில் உருவாக்குதல் | பழங்குடியின ஆராய்ச்சி மையம், ஊட்டி | 60.00 | – | 60.00 |
| 10. | தனி நபர் வருமானம் ஈட்டும் திட்டங்கள் | தாட்கோ | 1282.323 | – | 1282.323 |
| 11. | பழங்குடியினர் மாணவ/மாணவியர் விடுதி கட்டிடம் கட்டுதல், சித்தேரி தருமபுரி மாவட்டம் | பொதுப்பணித் துறை | – | 434.00 | 434.00 |
| 12. | NIT மற்றும் IIT –ல் சேர பழங்குடியினர் மாணவ/ மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் | தாட்கோ | 50.00 | – | 50.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | சாலைப்பணிகள், ஏற்காடு சேலம் மாவட்டம் | மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம் | | 201.00 | 201.00 |
| 14. | சாலைப்பணிகள், வாழப்பாடி ஒன்றியம் , சேலம் மாவட்டம் | மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம் | | 40.15 | 40.15 |
| 15. | வடிகால் வசதி ஏற்படுத்,02தி தருதல் | மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம் | | 30.855 | 30.855 |
| 16. | மின்வசதிகள் செய்து தருதல், சேலம் மாவட்டம் | மாவட்ட ஆட்சியர், சேலம் | – | 32.52 | 32.52 |
| | மொத்தம் | | 2237.791 | 2762.209 | 5000.00 |

5. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து மேலே 2 மற்றும் 3-ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை உள்ளடக்கிய பின்வரும் திட்டப்பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு ரூ.32,29,99,500/- (ரூபாய் முப்பத்திரெண்டு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | திட்டம் | செயல்படுத்தும் முகமை | தொகை (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | வருவாய் செலவு | மூலதனச் செலவு | மொத்தம் |
| 1. | இணைப்புச் சாலை, சிறுமலை பழங்குடியினர் பகுதி, திண்டுக்கல் மாவட்டம் | முதன்மை தலைமை வனப் பாதுகாவலர், சென்னை-15. | – | 572.00 | 572.00 |
| 2. | இணைப்புச் சாலை, வேலூர் மாவட்டம் | மாவட்ட ஆட்சியர், வேலூர். | – | 168.00 | 168.00 |
| 3. | கோழிக்குஞ்சு பொறிப்பக அலகு அமைத்தல் | இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை | 42.00 | 35.00 | 77.00 |
| 4. | மண்வள பாதுகாப்பு பணிகள் | முதன்மை பொறியாளர், வேளாண் பொறியியல் துறை | – | 550.684 | 550.684 |
| 5. | தனி நபர் பழத்தோட்டம் அமைத்தல், காய்கறி விதைகள் வழங்குதல் | ஆணையர், தோட்டக் கலைத்துறை | 3.468 | – | 3.468 |
| 6. | ஆறு பழங்குடியின மொழி பேச்சு வழக்கில் உருவாக்குதல் (Written Script format) | இயக்குநர், பழங்குடியின ஆராய்ச்சி மையம், ஊட்டி | 60.00 | – | 60.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | தனி நபர் வருவாய் ஈட்டும் திட்டங்கள் | மேலாண்மை இயக்குநர், தாட்கோ | 1282.323 | – | 1282.323 |
| 8. | பழங்குடியினர் மாணவ/மாணவியர் விடுதி கட்டடம் கட்டுதல், சித்தேரி தருமபுரி மாவட்டம் | தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை | – | 434.00 | 434.00 |
| 9. | NIT மற்றும் IIT –ல் சேர பழங்குடியினர் மாணவ/ மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் | மேலாண்மை இயக்குநர் தாட்கோ | 50.00 | – | 50.00 |
| 10. | மின்வசதிகள் செய்து தருதல், சேலம் மாவட்டம் | மாவட்ட ஆட்சியர், சேலம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் | – | 32.52 | 32.52 |
| | மொத்தம் | | 1437.791 | 1792.204 | 3229.995 |

6. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்புகளின் கீழ் பிரித்து பற்று வைக்கப்பட வேண்டும்.

4225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு –02–பழங்குடியினர் நலன் –796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II- மாநிலத் திட்டம் –JA- விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 16– பெரும் பணிகள். (துதொகு 4225–02–796–JA-1602)

2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –02–பழங்குடியினர் நலன் –796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II- மாநிலத்திட்டம் – JY - விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் - 09 – உதவித் தொகை – 01– நடப்புச் செலவுக்கான உதவித் தொகை (து.தொ. கு. 2225–02–796–JY-0912)

7. மேலும் பத்தி 5–ல் வ.எண். 7–ல் தாட்கோவிற்கு ஒப்பளிக்கப்பட்ட தொகை காசாக வழங்காமல் காசோலை மூலம் கீழ்க்காணும் தன்பெயர் வைப்பீடு கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

K-Deposit and Advances (b) Deposit not bearing interest – 8443-00 Civil Deposits – 800- Other Deposits – BY – Deposits of Tamil Nadu Adi Dravidar Housing Development Corporation (TAHDCO) (DPC 8443 00 800 BY 0004) (out go) (DPC 8443 00 800 BY 000G) (Receipts)

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும் மேலே பத்தி 5, வ.எண்.1 மற்றும் 8–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கடன் சான்றின் (Letter of credit) மூலம் வழங்கப்பட வேண்டும் என பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.77019/2013 நாள் 06.01.2014 ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,பழங்குடியினர் நலத்துறை, சென்னை –5.
மேலாண்மை இயக்குநர் தாட்கோ, சென்னை–18.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15.
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் சென்னை–6.
முதன்மை பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) சென்னை–35.
ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்,உதகை –4.
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை சென்னை–5.
மாவட்ட ஆட்சியர் வேலூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம்,
மாநிலக்கணக்காய்வுத் தலைவர் சென்னை–18/6/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8.
<u>நகல்:-</u> நிதி (ஆதி(ம) ப.ந. /வரவு செலவு பொது–I / பொது-II) துறை சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந8, ஆதிந4, பமே2) துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜா. தங்கம்
9.1.14
பிரிவு அலுவலர்.